# சிங்கம்



நாட்டிற்கு நாடு அரசர்கள் வேறுபடுவர். ஆனால் காட்டிற்கு அரசன் சிங்கம் மட்டுமே.

- சிங்கம் பாலூட்டி வகையைச் சேர்ந்ததாகும்.
- சிங்கம் மனிதர்களைப் போன்றே குழுவாக வாழும் இயல்புடையது.
- ஒவ்வொரு குழுவிலும் குறைந்தது இரண்டு ஆண் சிங்கங்கள் உட்பட பதினான்கு சிங்கங்கள் காணப்படும். ஆண் சிங்கங்கள் குழுவிலிருந்து வெளியேறி புதிய குழுவை ஏற்படுத்தும்.
- பெண் சிங்கம் வேட்டையாடுவதிலும், ஆண் சிங்கம் எல்லையைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தும்.

# சிங்கம்



• சிங்கத்தின் முழக்கமும் அதனுடைய பிடரி மயிரும் கம்பீரத்தை வெளிப்படுத்தும்.

• ஆண் சிங்கத்தின் முழக்கம் எட்டு கிலோமீட்டருக்கு கேட்கும்.

• சிங்கங்கள் பெரும்பாலும் இரவில் வேட்டையாடும்.

• மணிக்கு முப்பத்தாறு கிலோமீட்டர் வேகத்தில் ஓடும் திறனுடையது. மேலும் சிங்கங்கள் நன்றாக நீந்தவும் செய்யும்.



யானைகளைப் போன்றே சிங்கங்களிலும் ஆப்பிரிக்க சிங்கங்கள், ஆசிய சிங்கங்கள் என்ற இரு வகை உண்டு. ஆசிய சிங்கங்கள் இந்தியாவின் கிர் காடுகளில் மட்டுமே காணப்படுகின்றன. ஆப்பிரிக்க சிங்கங்களை விட ஆசியா சிங்கங்கள் சிறியவை.